# வேளாண்மைப் பொறியியல் துறை

நீர்வள நிலவளத்திட்டத்தை செயல்படுத்துவதில் வேளாண்மைப் பொறியியல் துறை ஒரு முக்கிய துறையாக உள்ளது. உலக வங்கி US டாலர் 75.40 மில்லியன் அதாவது ரூ. 300 கோடி அளித்து வேளாண் பொறியியல் துறையின் பணிகளுக்காக நிதி அளித்துள்ளது.

வேளாண் பொறியியல் துறையின் முக்கிய குறிக்கோள் விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்குவதே ஆகும். இரண்டாவது குறிக்கோள் நீரைச் சேமிப்பது என்பதிலும் மற்றும் மூன்றாவது குறிக்கோள் வேளாண் பணிகளை எளிதாக்குவது என்பதாகும். இந்த மூன்று குறிக்கோள்களும் அடைய பின்வரும் யுக்திகள் பின்பற்றப்படுகின்ற ன.

நுண்ணிய நீர்ப் பாசன முறைகளை (Micro Irrigation) அதாவது சொட்டு மற்றும் தெளிப்புநீர்ப் பாசன முறையை புகுத்துவது.

குழாய்கள் பதித்து அதன் மூலம் நீர் எடுத்துச் செல்லும் திறனை அதிகரித்தல்.

பண்ணைக் குட்டைகள் அமைப்பதன் மூலம், நீர்ப்பற்றாகுறையான காலங்களில் நீர்ப்பாசனத்திற்கு வழிவகை செய்தல் மற்றும் மீன்வளர்ப்புக்கு உதவிடுதல்.